2019 ஜூலை 8]

வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதுவரை எப்படிப் பேருந்துகள் சென்று கொண்டிருந்தன என்பது எனக்கு சரியாகத் தெரியவில்லை; Mofussil *வண்டியெல்லாம் அதன் வழியாகப் போகாது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வு செய்து, தேவையான பேருந்துகளை அந்த வழியாக இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

இ–சேவை மையம்

***40556—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *திருநெல்வேலி தொகுதி, பேட்டை, மானூர் மற்றும் கங்கைகொண்டான் பகுதிகளில் இ–சேவை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனே தம் நலன் என வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *திருநெல்வேலி தொகுதியில் 49 அரசு இ–சேவை மையங்கள் 52 முகப்புகளுடன் இயங்கி வருகின்றன. இதில், திருநெல்வேலி நகரத்தில் 5 இடங்களிலும், பேட்டையில் 2 இடங்களிலும், மானூரில் 3 இடங்களிலும், கங்கைகொண்டானில் 3 இடங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்*

கடன் சங்கம், தமிழ்நாடு கேபிள் டி.வி. நிறுவனம், கிராமத் தொழில்முனைவோர்கள் ஆகிய நிறுவனங்கள்மூலம் இயங்கி வருகின்றன. மேலும், திருநெல்வேலி நகரத்தில் 9 இடங்களில் தனியார் இ–சேவை மையங்களும், பழையபேட்டையில் 2 இடங்களில் தனியார் இ–சேவை மையங்களும் செயல்படுகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசுத் துறை விண்ணப்பங்களெல்லாம் on–line மூலமாக விண்ணப்பிக்கப்படுகின்றன. குறிப்பாக, வருவாய்த் துறை, சமூக நலத் துறை போன்ற துறைகளிலெல்லாம் அளவுக்கு அதிகமான விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இ–சேவை மையங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், சில வருவாய்த் துறை அலுவலகங்களில் இருக்கின்ற இ–சேவை மையங்கள் சில சமயங்களில் 20 டோக்கன்களை மட்டும் கொடுத்துவிட்டு, இன்று இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று கூறிவிடுகின்றார்கள். மக்கள் தொடர்ந்து 2, 3 நாட்கள் அலையக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. Server work ஆகவில்லை என்று காரணம் சொல்லிவிடுகிறார்கள். இதுகுறித்து தாலுகா அலுவலகத்தில் கேட்டால், இது எங்கள் சம்பந்தப்பட்ட துறை அல்ல என்று சொல்வதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதைச் சரிசெய்ய வேண்டும். மேலும், கடந்த கூட்டத் தொடரில், ஊராட்சிப் பகுதிகளில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இ–சேவை மையங்கள் திறக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதையும் உடனே திறந்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதிகம் பயன் பெறுவார்கள், நேர விரயம் குறையும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 8]

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை வசதிகளை நன்குணர்ந்துள்ள அம்மாவின் அரசு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே அரசின் சேவைகளை வழங்கும் நோக்கத்தோடு, இ–சேவை மையங்களை உருவாக்கியுள்ளது. இ–சேவை மையங்களின் பயன்பாடு, முக்கியத்துவத்தை நன்குணர்ந்த அம்மாவின் அரசு, கிராமப் பொதுச் சேவை மையங்களோடு கிராமப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்த திட்டம் வகுத்து, 24–2–2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் 14 இடங்களில் துவக்கி வைக்கப்பட்டது. தற்போது, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் வாயிலாக நிறுவப்பட்ட 115 இ–சேவை மையங்கள், மிகச் சிறப்பாக சேவைகளை தந்து கொண்டிருக்கின்றன.

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 49 இ–சேவை மையங்கள் 52 செயலிட முகப்புகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், மானூர் பகுதியில் 3 இ–சேவை மையங்கள், பேட்டை பகுதியில் 2 இ–சேவை மையங்கள், கங்கைகொண்டான் பகுதியில் 3 இ–சேவை மையங்கள், 24 தனியார் இ–சேவை மையங்கள் செயல்படவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சேவை மையங்கள் அப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதால் மேலும் கூடுதலாக அரசு இ–சேவை மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 20 டோக்கன்கள் மட்டும் கொடுத்துவிடுவதால், மீதி பணிகளெல்லாம் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார். அது மற்ற துறைகளிலே நடக்கலாம். ஆனால், நாங்கள் அவர்களுடைய விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டு, 5, 6 நாட்களுக்குள் concerned துறையிடமிருந்து, பதில்களை கேட்டுப் பெற்று URL மூலமாக ஒரு குறுஞ்செய்தியை அவர்களது செல்போன்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அதாவது, சமூக நலத் துறை என்றால், சமூக நலத் துறையின் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, அவர்கள்தான் அந்த certificates–ஐ கொடுக்க வேண்டும் என்பதால், அங்கிருந்து பதில்களை கேட்டுப் பெற்று அனுப்புகிறோம். மேலும், பட்டா மாறுதல் என்றால் வருவாய்த்

துறைதான் அதற்கான விளக்கத்தைத் தர வேண்டும். கொஞ்சம் காலதாமதத்துடன் தருவார்கள். அதனால்தான் ஒருசில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. இதையெல்லாம் போக்குகின்ற வகையிலேதான் தனியார் இ–சேவை மையங்கள்மூலம் Login I.D., Password எல்லாம் கொடுத்து, இப்பொழுது அவை தொடங்குகின்ற நிலையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தில் நீங்கள் அறிவித்தபடி, Syntel Company திறக்கப்பட்டிருக்கிறது. அதற்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அதுசம்பந்தமான ஒரு கேள்வி. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நீதியரசர் திரு. ரத்னவேல் பாண்டியன் அவர்களின் அறிக்கையின்படி, கங்கைகொண்டான் பகுதியில் உள்ள இளைஞர்கள் தவறான வழியில் செல்லாமல் இருக்கவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்காகவும் SIPCOT–ல் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு பல சலுகைகளை வழங்கி வருகிறது. ஆனால், இன்று வட நாட்டவர்களுக்கும், அண்டை மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அதிக வேலைவாய்ப்புகளை அங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Syntel Company–ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க முன்வருவார்களா என்பதையும் மற்றும் திருநெல்வேலி பகுதியைச் சுற்றியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மா

2019 ஜூலை 8]

அவர்களுடைய அரசைப் பாராட்டி நன்றி சொன்னதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை நாங்கள் Syntel Company *வெகு விரைவில் தொடங்கப்படும் என்று உத்தரவாதம் தந்தோம். அதேபோல, 2.64 இலட்சம் சதுர அடியில் அந்த நிறுவனம் தற்பொழுது* Atos Syntel *என்ற பெயரில் தொடங்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது அதில் 2018–2019–ல் படித்த 2,500* freshers*–ஐ மட்டும் எடுக்கிறார்கள். அந்த நிறுவனம், 2,500 படித்த ஏழையெளிய மாணவர்களுக்கு அல்லது படித்து முடித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய நிறுவனமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ யார் எந்தக் கோரிக்கை வைத்தாலும் நாங்கள் உடனடியாக வேலைவாய்ப்பை வழங்குகிறோம் என்று அவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, தகுதியான இளைஞர்கள் இருந்தால், உடனடியாக வேலைவாய்ப்பைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்பொழுது 100 இளைஞர்களை வைத்துத்தான் அந்த* Company*–ஐ தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் 2,400 பேர் அந்த நிறுவனத்திற்குத் தேவைப்படுகிறார்கள். எனவே, உங்களுக்கு விருப்பமிருந்தால் இளைஞர்களை அங்கே அனுப்பி, உடனடியாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

அடிப்படை வசதிகள்

***9402—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் மலைக் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?